# இரட்சிப்பு

RATCHIPPU


RATCHIPPU = SALVATION

Volume-12 | September-2022 | Issue-04

Price Rs.5-00 | Annual Subscription Rs.60/-





இயேசு
அதிகாரமுடையவராய்
அவர்களுக்குப்
போதித்தபடியினால்,
அவருடைய
போதகத்தைக்குறித்து ஜனங்கள்
ஆச்சரியப்பட்டார்கள்.
மாற்கு–1:22



**ஒருவரிடம் நண்பனை, வழிகாட்டியை, பெற்றோரை, இறைவனை ஒன்றாக பார்க்க முடியும் என்றால், அது ஆசிரியர் மட்டுமே!**


சர்வபள்ளி டாக்டர். ராதாகிருஷ்னன், முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர்

## இனிய ஆசிரியர்கள் தின வாழ்த்துகள்!



## இயக்குநர் கடிதம்...

From Mission Director's Desk




கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசுவின் இனிய திருப்பெயரில் அன்பின் வாழ்த்துக்கள். ஆசிரியர்கள் அனைவருக்கும் ஆசிரியர் தின நல்வாழ்த்துக்கள். கடந்த மாதத்தில் கொரோனா பெருந்தொற்றின் தாக்கம் குறித்த செய்திகள் பலா உலாவின செய்திகள் வந்தன. எனினும் முகக்கவசம், கை-சுத்திகரிப்பு, சமூக இடைவெளி, தடுப்பூசி ஆகிய பாதுகாப்பு முறைகளை கடைபிடித்ததின் விளைவாக பெருந்தொற்று பேரலையாக மாறாதபடி கர்த்தர் உதவி செய்தார். கொரோனா பெருந்தொற்றின் அனைத்து வடிவங்களும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. ‘இன்று கண்ட எகிப்தியனை இனி நீங்கள் காண்பதில்லை’ என இஸ்ரவேல் மக்களுக்கு கடவுள் கொடுத்த உறுதிமொழியைப்போல் ‘இனி கொரோனாவை காண்பதில்லை’ என்ற நிம்மதியின் செய்தியை நமக்கும் கடவுள் உறுதிசெய்யவேண்டும். இந்த உன்னத நோக்கத்துக்காக இரட்சிப்பு குடும்பத்தாராகிய எங்களுடன் இணைந்து கருத்துடன் ஜெபித்திட அன்புடன் அழைக்கிறோம்.

நம் ஊழியங்களுக்கான GOOD TIDINGS - RATCHIPPU HOME என்ற வலைதளம் www.ratchippu.in/ratchippu.in என்ற முகவரியில் செயலபட்டு வருகிறது. மாதந்தோறும் தேவசெய்தி, வேத-வினாக்கள் உள்ளிட்ட அனைத்து கட்டுரைகளையும் வலைதளத்தில் பதிவேற்றம் செய்கிறோம். இரட்சிப்பு வலைதளத்துக்கு விஜயம்செய்து தேவாசீர்வாதம் பெற அன்புடன் அழைக்கிறோம். இம்மாத ‘ஜெப-ஜன்னல்’- ஜெபங்கள் 9, 16, 23 தேதிகளில் நடைபெறும். ‘அனைவரும்-ஊழியத்தில்’ கைபிரதி ஊழிய திட்டத்தில் அனேகர் இணைந்துள்ளீர்கள், இயேசுவின் திருப்பெயரில் அனைவருக்கும் நன்றி. கைப்பிரதி அருட்பணியில் எங்களுடன் இணைந்திட அனைவரையும் அழைக்கிறோம். வேதாகம போட்டிக்கான பதில்கள், ஜெப-குறிப்புகள், அனுபவ சாட்சிகள் மற்றும் காணிக்கை அனுப்புவோர் ஊழிய இயக்குநரின் பெயருக்கு அனுப்பிவையுங்கள் (Online-வங்கி மற்றும் தொடர்பு விபரம் பக்கம் 19-ல்). கிருபை நம் அனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்கள் உடன் ஊழியன்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

---


**வேத-வரிகள்-141** **யோவான்-3:2**

## தமிழ் வேதாகமங்களின் ஒற்றுமைத் திரட்டு


| சத்திய வேதம் (ரேனியஸ்-1840) | பரிசுத்த வேதாகமம் (பவர்-1867) |
|---|---|
| ரபீ, தன்னுடனே பராபரன் இராவிட்டால் நீர் செய்கிற இப்ப டிப்பட்ட அற்புதங்களைப்போல ஒருவனும் செய்ய மாட்டான். ஆகையால், நீர் பராபரனாலே வந்த போதகர் என்று அறிந்தி ருக்கிறோம், | ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந் திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னு டனே தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான். |
| **திருவிவிலியம் (பொது-1995)** | **பரிசுத்த பைபிள் (இ.ஆர்.வி-1998)** |
| ரபி, நீர் கடவுளிடமிருந்து வந்த போதகர் என்பதை நாங்கள் அறிவோம். ஏனெனில், கடவுள் தம்மோடு இருந்தாலன்றி, நீர் செய்யும் இத்தகைய அடையாளங்களை யாரும் செய்ய இயலாது. | போதகரே, நீர் தேவனால் அனுப்பப்பட்டவர் என்பதை நாங்கள் அறிவோம். ஏனெனில், தேவனின் உதவி யின்றி எவரொருவராலும் நீர் செய்வதுபோன்ற அற்புதங்களைச் செய்ய இயலாது. |

வசன தியானம் - 135

# நல்ல போதகர் இயேசு



## இயேசு ஏன் நல்லாசிரியர் என அழைக்கப்பட்டார்?



**Luke-18:18** லூக்கா-18:18


அப்பொழுது தலைவன் ஒருவன் இயேசுவை நோக்கி: நல்ல போதகரே, நித்தியஜீவனைச் சுதந்தரித்துக் கொள்வதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான். லூக்–18:18

இயேசு ஏன் 'நல்ல ஆசிரியர்' என்று அழைக்கப்பட்டார்? இயேசுவை குறிப்பிட்டு அழைக்க ஆண்டவர், கடவுள், இரட்சகர், மீட்பர் போன்ற பல பெயர்கள் இருந்தும், அவர் ஒரு 'நல்ல போதகர்' என்பது சிறப்பு வாய்ந்ததாகும். சுவிசேஷங்களில் பேசப்பட்ட 90இடங்களில், 60-முறை இயேசு, ஆசிரியர் என அழைக்கப்பட்டார். யூத தலைவர் ஒருவர் இயேசுவை, 'நல்ல போதகரே' என அழைப்பதை லூக்-18:18ல் நாம் வாசிக்கிறோம். நிக்கொதேமு என்ற யூத-அதிகாரி இயேசுவிடம் வந்து, ''நீர் கடவுளிடமிருந்து வந்த போதகர்.'' (யோவா-3:2) என்று கூறுகிறார். திரளான மக்கள் இயேசுவைப் 'போதகர்' என்று அழைத்தனர். சீடர்களும் அவரைப் 'போதகரே' என்றுதான் அழைத்தார்கள். ''நீங்கள் என்னைப் போதகர் என்றும் ஆண்டவர் என்றும் அழைக்கிறீர்கள். ஆம் நான் போதகர்தான்.'' (யோவா-13:13) என்று இயேசுவே தன்னைக் குறித்து இங்கு கூறுகிறார்.

ஸ்காட்டிஷ் இறையியலாளர் ஜேம்ஸ் ஸ்டுவர்ட், 'இயேசுவின் போதனை வல்லமை உடையது, அது ஈடு இணையற்றது'' என்று கூறுகிறார். மலைப்பிரசங்கத்தின் முடிவில், ''மக்கள் இயேசுவின் போதனையைக் கண்டு வியப்படைந்தனர், ஏனெனில், அவர் மற்ற ரபிமார், பிரசங்கிகள் மற்றும் நியாய சாஸ்திரிகளைப்போல் அல்லாமல் அதிகாரம் உடையவராகக் கடவுளின் உண்மையான வார்த்தைகளைக் கற்பித்தார்.'' (மத்-7:29).

எந்த ஒரு ஆசிரியரைப்போல் இயேசு வகுப்பறையில் கற்கவும் இல்லை. பட்டங்களை அவர் பெற்றதும் இல்லை, ஆனாலும், உலகிலுள்ள எந்த ஆசிரியரையும்விட சிறந்த ஆசிரியராக அவர் திகழ்கிறார். இயேசு ஒரு நல்ல போதகர் என்ற அடிப்படையிலே தம் இறுதி கட்டளையை, ''நீங்கள் உலகமெங்கும் போய், சகல தேசத்தாருக்கும் போதித்து... நான் உங்களுக்கு கற்பித்த யாவையும் கைக்கொள்ளும்படி அவர்களுக்குப் கற்பியுங்கள்'' (மத்-28:19) என்ற வசனத்தில் ஒரு கற்பித்தலுக்கான கட்டளையாகக் கொடுத்துள்ளார். இயேசு ஒரு நல்ல போதகர் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும். இயேசுவின் இறுதி கட்டளையின் தாக்கத்தைப் பாருங்கள்.

2000-ஆண்டுகள் ஆனபின்னரும் இன்று உலகம் முழுவதும் 300-கோடி மக்கள் கிறிஸ்துவின் பெயரைக் கொண்டுள்ளனர். கிறிஸ்துவின் அன்பு எருசலேம் முதல் உலகின் மூலை முடுக்குகள் வரை பரவி யுள்ளது. லட்சக்கணக்கான சீடர்கள் இயேசுவின் அன்பை உலகம் முழுதும் கற்பிக்கிறார்கள். மாணவர்களின் வெற்றியே ஆசிரியரது தரத்தின் அளவுகோல் எனில், இயேசுவே ஒரு ஒப்பற்ற நல்ல ஆசிரியர் என்பது இன்று நிரூபணமாகிறது. தேவனுக்கே மகிமை. ஆமென்.



அருட்திரு. தர்மராஜா

படைப்பு: REV. SJD. தர்மராஜா, ஆயர் & அபிவிருத்திச் செயலர், இந்திய சுதேச மிஷனரி சங்கம், சென்னை.
REV. SJD. DHARMARAJA, PRESBYTER & HON. PROMOTIONAL SECRETARY, NATIONAL MISSIONARY SOCIETY OF INDIA

ஆசிரியர் தின சிறப்பு தேவசெய்தி...



அருட்திரு. தர்மராஜா

# நீங்கள் தேடும் நல்லாசிரியர்

## The Good Teacher that you are searching for

அப்பொழுது தலைவன் ஒருவன் இயேசுவை நோக்கி: நல்ல போதகரே, நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்வதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்று கேட்டான். லூக்–18:18

**Rev. S.J.D. Dharmaraja**
Presbyter and Mission Director
Good Tidings Bible Prints Ministries, Saligramam, Chennai-93, South India

இயேசு கிறிஸ்துவின் இனிய திருப்பெயரில் உங்களை அன்புடன் வாழ்த்துகிறேன். இம்மாதம் 5ம் நாள் நம் நாட்டில் ஆசிரியர் தினம் (நம் நாட்டின் முன்னாள் குடியரசுத் தலைவர், சர்வபள்ளி டாக்டர். ராதாகிஷ்ணன் அவர்களின் பிறந்தநாள்) கொண்டாடப்படுவதால், 'நீங்கள் தேடும் நல்லாசிரியர்' என்னும் செம்பொருளில் வேதவசனங்களின் துணையுடன் தியானிப்பது சிறப்பானதாக இருக்கும்.

பால் சுதாகர் என்பவர் தென்னிந்தியாவில் ஊழியம் செய்த ஒரு சுவிசேஷகர். அவர் தன் இளமைப் பருவத்தில் டாக்டர். ராதாகிருஷ்ணன் அவர்களது வீட்டிற்கு அருகில் வசித்து வந்தார். அவர் ராதாகிருஷ்ணனின் தத்துவம் மற்றும் வாழ்க்கை முறையால் ஈர்க்கப்பட்டு அவரை தனது முன்மாதிரியாக ஏற்றுக்கொண்டவர். எனவே சுதாகர், ராதாகிருஷ்ணன் அவர்களிடம், ''நீங்கள்தான் எனது குரு, ஆகவே. உங்கள் காலடியில் அமர்ந்து கற்றுக்கொள்ள விரும்புகிறேன்.'' எனக் கூறினார். ஆனால், டாக்டர். ராதாகிருஷ்ணன், தாம் அவரது குருவாக இருக்க தகுதியற்றவர் என்று கூறி, ''நீங்கள் ஒரு குருவைப் பின்பற்ற விரும்பினால், இந்தப் புத்தகத்தைப் படியுங்கள். அங்கே நீங்கள் தேடும் குருவைக் காணலாம், அவரைப் பின்தொடரலாம்''. என்று கூறி, சுதாகரிடம் ஒரு புதிய ஏற்பாட்டை கொடுத்தார். சுதாகர் அந்த புதிய ஏற்பாட்டை விருப்பமில்லாமல் எடுத்துச் சென்றார். தொடர்ந்து அவர் இயேசு கிறிஸ்துவின் வாழ்வு, சேவை மற்றும் அற்புதங்களை வாசித்தார். பின்னர், 'வாழும் வார்த்தை'-யாகிய இயேசுவின் போதனைகளால் கவர்ந்து இழுக்கப்பட்டு, இயேசு கிறிஸ்துவை தனது தனிப்பட்ட இரட்சகராக ஏற்றுக் கொண்டார். பின்னர், பால் சுதாகர் கிறிஸ்துவின் நற்செய் தியை வல்லமையாகப் பிரசங்கித்தார்.

நாமும் கூட இன்று நம் பிள்ளைகளுக்காக ஒரு சிறந்த ஆசிரியரைத் தேடுகிறோம். நம் கையிலிருக்கிற திருமறையை வாசித்து அதை கருத்தாய் தினம் தியானிப்போம். நாம் தேடும்

ஆசிரியரை அங்கு நாம் காணமுடியும். ஆம், இயேசு கிறிஸ்து என்னும் ஒப்பில்லா மகத்துவ ஆசிரியர்தான் அவர். இயேசு கிறிஸ்து ஒரு இணையற்ற ஆசிரியர் மட்டுமல்ல, அவர் ஆசிரியர்களுக்கு முன்னுதாரணமான ஒரு ஆசிரியரும் ஆவார். அந்த நல்லாசிரியராம் இயேசுவின் சிறப்பியல்புகளை நாம் தியானிப்போம்.

மாணவர்களை அன்புடன் ஏற்கும் ஆசிரியர் இயேசு:-

‘‘சிறு பிள்ளைகளை என் நாமத்தினாலே ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான்.’’ என்றார் இயேசு. (மாற்-9:37). சிறு பிள்ளைகளை அலட்சியத்தோடு சீடர்கள் அதட்டியபோது, இயேசு, ‘‘சிறுபிள்ளைகள் என்னிடத் தில் வர இடங்கொடுங்கள். அவர்களை தடை செய்யாதிருங்கள். பரலோகராஜ்யம் அப்படிப்பட்டவர்களுடையது.’’ (லூக்-18:16) என்கிறார். சிறுபிள்ளைகளின் முக்கியத்துவத்தை சீடர்களுக்கு உணர்த்தும் வகையில் அவர்களோடு தமது நேரத்தை அதிகமாய்ச் செலவிட்டு அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

பிள்ளைகள் விரும்பும் கடிகாரம், சைக்கிள், மொபைல்-போன், பொம்மைகள், உணவு-இனிப்பு ஆகியவற்றை வாங்கிக் கொடுத்தால் மட்டும் போதும், அதுதான் குழந்தைகளை ஏற்று அன்பு செய்வது என்று பெற்றோர்களாகிய நாம் எண்ணுகி றோம். அவர்களுக்க ஞானத்தை வழங்கக்கூடிய வழிமுறைகள் அவசியமானவை என்பதை பெற்றோர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும். பிள்ளைகள் இயேசுவிடம் வர பெற்றோர்கள் தடையாக இல்லாமல் இயேசுவின் அன்பை அவர்களுக்கு உணர்த்துகிறவர்களாய் வாழவேண்டும். வேதம் சொல்லுகிறது: ‘இயேசு, ஒரு சிறு பிள்ளையை எடுத்து, அதை அவர்கள் நடுவிலே நிறுத்தி, அதை அணைத் துக்கொண்டு, இப்படிப்பட்ட சிறு பிள்ளைகளில் ஒன்றை என் நாமத்தினாலே ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான் என்றார்’ (மாற்-9:37).

இன்று நாம், பிள்ளைகளை அன்புடன் அணுகுவதை விட்டுவிட்டு மனிதாபிமானம் அற்ற வகையில் அவர்கள் மேல் கல்வியைத் திணிக்கிறோம். எனவே, இன்றே நம் தவறை உணர்வோம். பிள்ளைகளுக்கு அன்புடன் போதிக்கவும், கற்றலையும் கற்பித்தலையும் ஒரு அன்பின் அனுபவமாக மாற்றவும் உறுதியேற்போம். பிள்ளை களை இயேசுவிடம் கொண்டுவருவது என்பது கடவுளின் ஆசீர்வாதத்தை நமக்கும் தருகிறது என்பதை உணர்ந்து அவர்களை ஆலயம், ஞாயிறு பள்ளி, விடுமுறை வேதாகம பள்ளி, வேத-பாட வகுப்புகள் போன்றவற்றில் இணைத்திடுவோம்.

மாணவர்களுக்கு எளிமையாய் போதிக்கும் ஆசிரியர் இயேசு:-

‘தனக்குத் தெரிந்ததையெல்லாம் சொல்பவர் ஆசிரியர் அல்ல. எளிமையாக பேசுபவரே சிறந்த ஆசிரியர்’ என்றார் ஜான் மில்டன். இயேசுவாகிய நம் ஆசிரியரின் போதனைகள் எளிமையானவை. அவர், மக்களுக்கு எளிதில் புரிகிற வகையில் தாலந்துகள், கெட்ட-குமாரன், நல்ல-சமாரியன், உப்பு, கடுகு, புளித்தமாவு, காட்டு-புஷ்பம், ஆகாய-பறவை என உவமைகள் மற்றும் கதைகள் வழியாய் போதித்தார்.

தமது சீடர்களுக்கு நல்ல-நிலம், நல்ல-விதைகள், நல்ல-முத்துக்கள், நல்ல-மீன்-வலை போன்ற உவமைகள் வழியாய் இறையரசு குறித்து போதிக்கையில் அவர்கள் தமது கருத்தைப் புரிந்துகொண்டதை உறுதிசெய்யும் வகையில் அவர்களிடம், ‘இவைகளை அறிந்துகொண்டீர்களா?’ என கேட்கிறார் அதற்கு அவர்கள், ‘ஆம், அறிந்து கொண்டோம் ஆண்டவரே!’ என பதிலளிப்பதை (மத்-13:51) நாம் பார்க்கிறோம்.

எனவே, இன்றைய ஆசிரியர்கள், இயேசுவின் மாதிரியை பின்பற்றி கதைகள் மற்றும் சம்பவங்கள் மூலமாக மாணவர்கள் புரிந்துகொள்ளும் வகையில் கற்பித்திட தங்களை அற்பணிக்கவேண்டும்.

வாழ்ந்து-காட்டி போதிக்கும் முன்மாதிரி-ஆசிரியர் இயேசு:-

போதிப்பது ஒன்று, செய்வது ஒன்றாக இருந்தால் மாணவர்கள் தங்கள் ஆசிரியர் களை ஏற்கமாட்டார்கள். ‘போதிப்போர் பலர். போதனைப்படி வாழ்பவர் சிலரே. அந்த சிலரே போற்றுதற்குரிய ஆசிரியர்’ என்றார் அறிஞர் பெர்னாட்ஷா.

இயேசுவாகிய நம் ஆசிரியர், ‘‘நான் உங்களுக்குக் கற்பித்தது போல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியை காண்பித்தேன்.’’ என்றார் (யோவா-13:15).

இயேசுவானவர், நன்நெறியைப் போதித்து அதன்படி வாழ்ந்து காட்டினார். அதனால் மக்கள் அலையலையாய் அவரைத் தேடி வந்தனர். பிறரை மன்னிக்கும்படி போதித்த இயேசு, தம் பகைவரை சிலுவையில் மன்னித்தார் (லூக்-23:34). ஆவியில் எளிமையுடன் வாழவேண்டும் என்று போதித்த அவர் மக்களோடு மக்களாக எளிமையாக வாழ்ந்து காட்டினார் (மத்-5:3). நீதிக்காக துன்பத்தைத் தாங்கவேண்டும் என போதித்த அவர் மனுக்குலத்தின் நீதிக்காக பாடுபட்டு தம்மை தியாகம் செய்தார் (மத்-5:10).

வேதம் சொல்லுகிறது: இயேசு ஒரு துணியை அரையிலே கட்டிக் கொண்டு, ஒரு பாத்திரத்தில் தண்ணீர் வார்த்து, சீஷரின் கால்களைக் கழுவி, அவர்களின் பாதங்களை துணியினால் துடைத்தார். மட்டுமல்ல, ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவர் கால்களை மற்றவர் கழுவுங்கள்’ என்றார் (யோவா-13:4-14). இவ்வாறாக, இயேசு ஒரு நல்லாசிரியராகவும், முன்மாதிரிப் போதகராகவும் இருக்கிறார்.

பிரியமானவர்களே! நாமும் இயேசுவைப்போல் வாழ்ந்து நல்ல ஆசிரியர்களாய் உருவெடுப்போம். நல்ல ஆசிரியர்களை உருவாக்குவோம். கர்த்தர்தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

கிறிஸ்துவின் பணியில் உங்களுடன்
அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா

# எமது கைப்பிரதிகள்

## நல்ல விதைகள் – GOOD SEEDS

## நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள்

### Good Tidings Bible-Prints Ministries

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! சுவிசேஷ ஊழிய பயன்பாட்டுக்காக 20-வகையான கைப்பிரதிகளை வெளியிட்டு அவற்றை கிறிஸ்துவை அறியாத மக்களுக்கு விநியோகம் செய்துவருகிறோம். சுவிசேஷ ஊழியம் செய்யும் அன்பர்களுக்கும் திருச்சபைகளுக்கும் கைபிரதிகளை இலவசமாய் வழங்குகிறோம். ஒரு வகை கைப்பிரதி வெளியிட ஆகும் செலவு ரூ. 3000/- மட்டும். கைப்பிரதிகளை Sponsor செய்து இயேசுவின் அன்பை அனைத்து மக்களும் அறிந்திட உதவுங்கள். Sponsor செய்ய விரும்பும் அன்பர்கள் நமது ஊழிய இயக்குநரை தொடர்பு கொள்ளும்படி அன்புடன் அழைக்கிறோம்.

| No.&Title of the Tract | Sponsor's Name |
|---|---|
| 1. மைனாவின் கதை - The story of Myna | - Rev. S.J.D. Dharmaraj, Che-93 |
| 2. வக்கீல் நீதிபதியானார் - Counsel became Judge | - Mr.T. David Manohar, Che-93 |
| 3. மாட்டு உண்ணி - The Cattle Tick | - Mr.R.G. Sutharsingh, Che-93 |
| 4. கர்வமான காகிதப்பட்டம் - The Envious Kite | - Mrs. Rani Samuelraj, Che-93 |
| 5. டிரைவர் இல்லாத ரயில் - A Train without Driver | - Mr. Prasad Samuel, Cud-6 |
| 6. சீரழிக்கும் சீமைக்கருவை - Acacia of fence | - Mr.P.H. Jaychandran, Che-93 |
| 7. குடிநீர் குழாயில் குண்டுத்தவளை - Frog in tap | - Mr.R.C.P. Nixon, Che-93 |
| 8. இளவரசனும் கைதியும் - Prince and the Convict | - Mr.J. Albert, Kumbakonam |
| 9. கடலில் கல்லறைத் தோட்டம் - Bermuda Triangle | - Mr.C. James, Sirkali |
| 10. பற்றியெரியும் மனிதர்கள் - Human Combustion | - Mr.S. Nixon Everbright, AP |
| 11. டைட்டானிக் கப்பல் - The Titanic Ship | - Dr. Sharmila Selvaraj, Cud-1 |
| 12. நாக்குப்பூச்சி - The Tape Worm | - Mr. Arthur Masilamani, Che-7 |
| 13. அதிசய சொட்டு மருந்து - Miracle Drops | - Rev. S.J.D. Dharmaraj, Ch-93 |
| 14. எரியும் முன் எச்சரிக்கை - Warning before death | -Mr.A. Santharaj, Kumbakonam |
| 15. பிணக்குவியலில் இருந்து - From pile of Corpses | - Mr. S.J.P. Raja, Che-126 |
| 16. வெந்நீரில் தவளை - The Frog Experiment | - Mrs. Stella David, Tuticorine |
| 17. கன்கார்டு விமானம் - The Concord Aircraft | - Mr.B. Wilson, Che-92 |
| 18. ஜீன் வால் ஜீன் - Jean Valjean | - Mr. Samson Abraham, Che-93 |
| 19. பெர்லின் சுவர் - The Berlin Wall | - Mr.A. Inbaraj, Kumbakonam |
| 20. மரணத்தின் சாலை - El Camino de la Muerte | |

கைப்பிரதிகளை Sponsor செய்த தேவபிள்ளைகளுக்கு எங்கள் நன்றி. நற்செய்தி கைப்பிரதிகளை எங்களிடம் இலவசமாகப் பெற்று உங்கள் ஊழியங்களில் பயன்படுத்தும்படி அன்புடன் வேண்டுகிறோம். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமேன்.

அருட்திரு. எஸ்.ஜே.டி. தர்மராஜா, ஊழிய இயக்குநர்
நற்செய்தி வேதாகம அச்சுப்பதிவு ஊழியங்கள், சாலிகிராமம், சென்னை-93. தென்னிந்தியா.

வேத ஆராய்ச்சி - 64



Rev. Dr. D. சுரேஷ் ராஜன்

# சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள்

Author: Rev. Dr. D. Suresh Rajan

சங்கீதம் – 64




Episode - 64

முன்னுரை:-

தாவீது இந்த சங்கீதத்தை எழுதியது, அவர் ராஜாவாகிய சவுலின் அரமனையில் பணியாற்றிய சமயமாய் இருக்கலாம் என வேத ஆராய்சியாளர்கள் கருதுகின்ற னர் (1சாமுவேல் அதி-18, 19). சவுல்-அரசன் தாவீதை தனது எதிரியாகக் கருதி, எப்படியாகிலும் அவரைக் கொன்றுவிவேண்டும் என்று தன் மனதில் தீர்மானம் பண்ணி, தாவீதுக்கு பல இடையூறுகளைக் கொடுத்துவந்தான். இதனால், தன் உயிரைப் பாதுகாத்துக் கொள்ளும்படிக்கு வனாந்திரங்களிலே சுற்றித்திரியவேண்டிய நிர்பந்தம் தாவீதுக்கு ஏற்பட்டது. பழிக்குப்பழியாக சவுலைக் கொன்றுவிடவேண்டும் என்ற எண்ணம் தாவீதுக்கு ஒருபோதும் இருந்ததில்லை. மாறாக, பழிவாங்குதல் தேவனுக்குறியது, தேவன் துன்மார்க்கருக்குப் பதிலளிப் பார் என்ற தனது புரிந்துகொள்ளுதலில் அவர் தெளிவாக இருந்தார். ஆகவே, தனது மனதின் குமுறல்களையும், தேவனை அவர் சார்ந்திருக்கும் நிலையையும் இப்பாடலில் அவர் வெளிப்படுத்துகிறதை நாம் பார்க்கிறோம்.

1. ஜெப-வாழ்வு:- (வசனம் 1-2)

தாவீது, தனது சத்துருக்களிடமிருந்து தன்னை பாதுகாத்துக்கொள்வதற்காக தன்னையோ அல்லது தன்னைச் சார்ந்திருந்தவர்களையோ நம்பியிராமல், தேவனிடத்திலேயே தன் முழு நம்பிக்கையையும் வைத்து வேண்டுதல் செய்வதை நாம் இங்கு காண்கிறோம். 'பயத்தை நீக்கியருளும்' 'உயிரைக் காத்தருளும்' 'கலகத்துக்கு என்னை விலக்கி மறைத்தருளும்' என்று இந்த வசனங்களில் அவர் தேவனை நோக்கிப் பிரார்த்தனை செய்வதைப் பார்க்கிறோம். முதல் ஆறு வசனங்களில் தன் எதிரியின் குணங்களை வரிசைப்படுத்துகிறார். அவர்கள், 'தங்கள் வார்த்தைகளையே ஆயுதங்களாகப் பயன்படுத்தி மனதைக் காயப்படுத்து பவர்கள்', 'தீமை செய்யவேண்டும் என்று கக்கணம் கட்டிக்கொண்டிருப்பவர்கள்' 'மறைவாக கண்ணிகளை வைத்து கவிழ்க்க நினைப்பவர்கள்' ஆகவே, ஆண்டவர் மாத்திரமே இதயத்தில் தீமையை வைத்திருக்கும் இத்தகைய எதிரிகளிடமிருந்து தன்னைக் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கையில் தாவீது மிகவும் தெளிவாகவும் உறுதியாகவும் இருந்தார்.

அன்பானவர்களே! நம்முடைய வாழ்விலும் நமது இக்கட்டான சூழ்நிலைகளில் யாரிடம் உதவி கேட்டுச் செல்கிறோம்? நாமும் ஆண்டவரிடத்தில் நம்முடைய இருதயத்தை ஊற்றி விடப் பழகுவோமானால், நம் இருதயமும் தேவனை நம்பித் திடமனதாய் இருக்கும்.

2. தேவனைச் சார்ந்திருத்தல்:- (வசனம் 7-8)

ஜெபம் செய்வது மட்டுமல்ல, நமது விண்ணப்பங்களுக்கான பதிலுக்காக தேவ னைச் சார்ந்திருப்பதும் அவசியம் ஆகும் ஏனென்றால், நமக்கு வெற்றி தருபவர் நமது ஆண்டவர் மாத்திரமே. தேவனை நம்புவதும் நூறு-சதம் அவரையே சார்ந்திருப்பதும் இன்றியமையாத தாகும். தேவன் சூழ்நிலைகளைத் தலைகீழாக மாற்றுகிறவர். தாவீதின் எதிரிகள் மீது தேவன் எடுக்கவிருக்கும் நடவடிக்கைகள் என தாவீது கூறுவதை இந்த வசனங்கள் நமக்கு விவரிக் கின்றன. 'வார்த்தைகளாகிய அம்புகளைத் தொடுத்து எதிரிகள் மீது தேவன் எய்வார். அவர் கள் சடுதியாய் காயப்படுவார்கள்' என்று தாவீது கூறுவதை இங்கு நாம் காண்கிறோம்.

அன்பானவர்களே! தேவன் நமது வேண்டுதல்களை செவிசாய்த்துக் கேட்டு, நமக்கு இரங்கி உதவிசெய்வார் என்ற உறுதியான நம்பிக்கையோடு நாமும் அவரைச் சார்ந்துகொள்ள தேவன் நமக்கு கிருபை செய்வாராக.

3. கடவுளைக் கனப்படுத்துதல்:- (வசனம் 9, 10)

தேவனுடைய கரத்திலிருந்து நன்மைகளைப் பெற்றுக்கொண்டவர்கள், அவரை தங்கள் வாழ்வினாலும் வார்த்தையினாலும் கனப்படுத்துவது அவசியமான ஒன்றாகும். நாம் பெற்ற வெற்றிகளை பல நேரங்களில் மற்றவர்களுக்கு அறிவித்து அதன் வழியாய் கடவுளுக்கு உண்டான கனத்தைக் கொடுக்க பல சமயங்களில் நாம் தவறிவிடுகிறோம். ஆனால், தேவனு டைய இரட்சிப்பைக் கண்ட நாம், அதை அனைவருக்கும் அறிவிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். தாவீதும் அவ்வாறாகவே, ''எல்லா மனுஷரும் பயந்து, தேவனுடைய செயல் களை அறிவித்து, அவருடைய கிரியைகளை உணர்ந்துகொள்வார்கள். நீதிமான் கர்த்தருக் குள் மகிழ்ந்து, அவரை நம்புவான். செம்மையான இருதயமுள்ளவர்கள் யாவரும் மேன்மை பாராட்டுவார்கள்.'' என மனப்பூர்வமாக அறிவிக்கிறதை இங்கு நாம் வாசிக்கிறோம்.

தேவபிள்ளைகளே! நாமும் தேவனுடைய கிரியைகளை மற்றவர்களுக்கு அறிவித்து தேவனைக் கனப்படுத்தி அதினிமித்தம் மேன்மைபாராட்டுவோம்.

முடிவுரை: தாவீது தனது அனுதின வாழ்க்கை அனுபவங்களின் மத்தியில் தேவனை ஜீவிக்கிறவராகக் கண்டு-அனுபவித்து தேவனுடைய இருதயத்திற்கு ஏற்றவராகக் காணப் பட்டதுபோல நாமும் தேவனை நோக்கி ஜெபிப்பதிலும், அவரைச் சார்ந்துகொள்வதிலும் கவனமாயிருந்து, அவரை மற்றவர்களுக்கு அறிவித்து அவருடைய நாமத்தைக் கனப்படுத்து வோம். கிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.

சங்கீதங்கள் கற்றுத்தரும் விலையேறப்பெற்ற சத்தியங்கள். தொடரும்...

AUTHOR: REV. DR. D. SURESH RAJAN, CO-FOUNDER, BIBLE TRANSLATION INITIATIVES, COIMBATORE, SOUTH INDIA
ஆசிரியர்: அருட்திரு. அறிவர். டி. சுரேஷ் ராஜன்,
இணை நிறுவனர், வேதாகம மொழிபெயர்ப்பு முயற்சிகள், கோயம்புத்தூர். தென்னிந்தியா.

# வேதாகம போட்டி-142 சரியான பதில் அளித்தோர்

1) அமிர்தகனி CHE
2) அன்பு சுதந்தரம் TIN
3) ஏஞ்சல் சி. TIN
4) ஏஞ்சல் ராஜதுரை CHE
5) ஏஞ்சலின் பிரியா ஏ. TIN
6) ஏஞ்சலின் வில்லியம்ஸ் CHE
7) அரோமா சாத்ராக் TIN
8) ஆர்தர் மாசில்லாமணி CHE
9) அருள்செல்வி VIR
10) அருள்செல்வி ஜாண்ஸன் TIN
11) பங்கஜம் வில்சன் CBE
12) பெல்சி தங்கராஜ் CHE
13) பெனிட்டா பிராங்க்ளின் CHE
14) பியூலா அலெக்ஸ் CHE
15) பெட்டி பிரின்ஸ் CHE
16) செலினா பென்சி வில்சன் DR, CHE
17) சந்திராபாய் மாசிலாமணி AVD
18) சந்திரலேகா KAL
19) சந்திரா சாமுவேல் TIN
20) சார்லட் டேவிட் CHE
21) சார்லஸ் AKASH NAGAR CHE
22) சார்லஸ் ஃபின்னி DR. CHE
23) செல்லம் சங்கீதா TIN
24) சிட்டி NOC
25) கிறிஸ்டல் ஜாய் யோபு TPT
26) கிறிஸ்துதாஸ் GOP
27) கிறிஸ்டி ஞானராஜ் CHE
28) கிறிஸ்டி ஜேம்ஸ் SIR
29) சிசிலி புஷ்பம் டேவிட் CHE
30) டேனியல் தாமஸ் TIN
31) டேனிங் சொர்ணா ஜெஸ் TIN
32) டேவிட் ஜே.ஆர். CHE/CBE
33) தெபோராள் ஆனந்தமணி CNG
34) டெல்பி பாத்திமா CHE
35) தேவமணி ஆபிரகாம் TUT
36) தேவநேசம் ராஜாசிங் CHE
37) டோராபாய் CHE
38) எஸ்தர் D.R. TIN
39) எவாஞ்சலின் கிப்சன் MSK
40) எவாஞ்சலின் ஜோன்ஸ் DR. SLM
41) ஞானம் ஜெபராஜ் TIN
42) ஞானம் பிலிப் CBE
43) ஞானராணி G. PAN
44) ஞானசெல்வி மோசஸ் CHE
45) கிரேஸ் டேனி PCM
46) கிரேஸ் பொன்மணி ரெக்ஸ் CHE
47) கிரேஸ்லின் சாந்தி TIN
48) கிரேஸியா ஜெயபால் CHE
49) கிரிசெல்டா செய்லர் CHE
50) ஹெலன் ஜான்சிராணி TIN
51) ஹெலென் ஜெனிபர் பாண்டியன் CHE
52) ஹெலன் திலக் TUT
53) ஹேமா அஜீத் CHE
54) ஹேமா கேப்ரியேல் MUM
55) ஹெப்சிபா மங்களராஜ் TIN
56) ஹிம்லா ராஜகுமாரி CHE
57) இளவரசி ஜோபிதா CBE
58) இன்பவல்லி கலைச்செல்வன் MDU
59) இந்திரா கெத்ஸி டேவிட் TIN
60) ஜமீலா செல்வராஜ் CHE
61) ஜேன்ஸ் ANM
62) ஜேன் தர்மராஜ் TIN
63) ஜான்ஸி சந்தியா MAR
64) ஜாஸ்மின் ஞானதாஸ் CHE
65) ஜெபா ஜெயராஜ் AVD
66) ஜெபக்குட்டி மோசஸ் TIN
67) ஜெபசீலி கிளின்டன CHE
68) ஜெபஸ்டின் ஜி. KNR
69) ஜெபா சீனி MKM
70) ஜெமி ஜாய் பிளஸ்ஸி TIN
71) ஜெமீலா நிக்ஸன் CHE
72) ஜெனித்தா செல்வின் TIN
73) ஜெரின் ஸ்டீபன் CHE
74) ஜெஸி செல்லதுரை CBE
75) ஜெஸி ஜெயக்குமார் TIN
76) ஜெயா ஆல்பர்ட் KUM
77) ஜோனா ஸ்டீபன் AVD
78) ஜோஸ்பின் ஜெஸி CHE
79) ஜாய்ஸ் பாண்டியன் CHE
80) ஜூலியட் ஜெயக்குமார் TIN
81) கலா கிருபாகரன் TIN
82) கலையரசி செல்வராஜ் CHE

## வேதாகம போட்டி-142 சரியான பதில் அளித்தோர் பட்டியலின் தொடர்ச்சி

83) கஸ்தூரி எலியாஸ் TIN
84) கிங்ஸ்லி தங்கமணி CHE
85) கிருபா சாந்தி AV. CHE
86) கோயில்பிள்ளை ஞானத்தாய் APM
87) லதா மைக்கேல்ராஜ் CHE
88) லீலா டேவிட் CHE
89) லீலா ஜோஸப் CBE
90) லில்லி ஜாண்ஸன் CHE
91) லிஸி டென்சிங் TIN
92) மல்லிகா V. CHE
93) மல்லிகா ஜாய்ஸ் TCY
94) மணிமேகலை ஜெயக்குமார் TIN
95) மனோகரம் தனராஜ் NAZ
96) மரியாள் JS TUT
97) மேபல் கிறிஸ்டியான் CHE
98) மரிய பாப்பா CHE
99) மெஜிலா ஜோஷ்வா TUT
100) மெர்சிபா CBE
101) மெர்சி தனராஜ் CBE
102) மெரிட்டா ஜெயபாலன் TCY
103) மியூரியல் புஷ்பராஜ் CHE
104) நிக்ஸன் எவர்பிரைட் TIN
105) ஆலிவ் ஜெயபாலன் CBE
106) பாக்யபாய் ஆரோன் TIN
107) பால் தங்கம் CHE
108) பமீலா எட்வின் KAN
109) பெர்சி பால் பொன்சிங் SAW
110) பிங்க்லின் தேவமலர் CHE
111) பிரேமா பூபாலன் AVD
112) பிரேமா ஜானி PCM
113) பிரேமா ஸ்டாலின் CHE
114) பிரின்ஸ் தயாநிதி CHE
115) பிரிசில்லா தாஸ் CHE
116) பிரிஸ்கில்லாள் சசி CBE
117) ராஜபிரமிளா TPT
118) ராஜ்மேரி சார்லஸ் KER
119) ரமோலா அதிசயராஜ் TIN
120) ராணி பிரபாகரன் TIN
121) ராணி சாமுவேல்ராஜ் CHE
122) ரத்னா டென்னிஸன் CBE
123) ரத்னாவதி பாண்டியன் CHE
124) ரெஜினா விக்டர் TIN
125) ரோஸ்லின் மார்கிரெட் CHE
125) ரோஸி ஸ்டீபன் CHE
126) ரூபவதி நோபிள் TIN
127) ரூபி ஜாண்ஸன் TIN
128) ரூத் ஜாண்ஸன் TIN
129) சலோமி மனோகர் DR. CHE
130) சாம்பு ஜெயச்சந்திரன் MDU
131) சாமுவேல் டேவிட் TPT
132) சாரா பாலசிங் MDU
133) சரோஜா பாக்யசீலி பர்னபாஸ் MSK
134) சரோஜினி எலிசபெத் CHE
135) செல்வ அமுதா ஜார்ஜ் CHE
136) செல்வ பென்சி ஆபேல் AP
137) செல்வராணி ஆல்பர்ட் CHE
138) செல்வராணி G CHE
139 செல்வி அமிர்தராஜ் CHE
140) ஷாலி எடிசன் CHE
141) சாந்தி ரோஸ் CBE
142) ஷர்மிளா செல்வராஜ்.DR. CUD
143) ஷீபா சாம்ஸன் CHE
145) ஷெரீன் ஜெபராஜ் PAN
146) சவுந்தரம் சாலமோன் CHE
147) ஸ்ரீஜா ∴பிராங்க்ளின் CHE
148) ஸ்டெல்லா டேவிட் TUT
149) ஸ்டெல்லா கனகராஜ் CHE
150) சுகிர்தா ஆல்வின் CHE
151) சுகிர்தா சின்னதுரை TIN
152) சுஜாதா சாமுவேல் CHE
153) சுமித்ரா B. CHE
154) சுசீலா தியோடர் TCY
155) சுவர்ணலதா அற்புதராஜ் CHE
156) தாரா மாணிக்கம் CHE
157) தெல்மா ஸ்டேன்லி MDU
158) வனஜா ஹெர்பர்ட் TIN
159) வசந்தா அன்பன் TIN
160) வசந்தி கருணாகரன் CHE
161) வசந்தி வாசன் CHE
162) விஜயராணி A. CHE
163) விஜி டேனியல் CHE
164) விமலா ஜெயக்குமார் TUT
165) விமல் மேரி திரவியராஜ் MSK
166) வினோலியா ஜேம்ஸ் KPT
167) வைலட் கிறிஸ்டோபர் TIN
168) வைலட் சைரஸ் CHE

PRAYER-WINDOW



PRAYER-WINDOW

ஜெப-ஜன்னல் ஜெப-ஜன்னல்

## ஜெப–ஜன்னல் ஜெப நேரங்கள் செப்டம்பர் – 2022

| | |
|---|---|
| **ஜெப-ஜன்னல்-1 காலை-ஜெபம்** | நாள் : 09–09–2022 இரண்டாம் வெள்ளி<br>நேரம்: காலை 5முதல் 6மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-2 மதிய-ஜெபம்** | நாள் : 16–09–2022 மூன்றாம் வெள்ளி<br>நேரம்: மதியம் 1முதல் 2மணி வரை. |
| **ஜெப-ஜன்னல்-3 இரவு-ஜெபம்** | நாள் : 23–09–2022 நான்காம் வெள்ளி<br>நேரம்: இரவு 8முதல் 10மணி வரை. |

பிரியமானவர்களே! இந்த ஜெப–ஜன்னல் ஜெப–நேரங்களில் தானி–6:10 வசனத்தின்படி **"தானியேல், மேலறையில் எருசலேம் தேவாலயத்திற்கு நேராய் பலகணிகள் திறந்திருக்க"** ஜெபித்ததைப்போல் நமது இயக்குநரும், ஜெப–ஜன்னல் ஜெப–வீரர்களும் ஆலயம் நோக்கி ஜெபிக்கவிருக்கிறார்கள். நீங்களும் இந்த நேரங்களில் உங்கள் ஆலயம் நோக்கி ஜெபிக்கும்படியாக அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

# திருச்சபை வரலாறு

**2000ஆண்டு வரலாறு 2ம் வருகைக்குத் தயாராகு**

## History of Christianity In India from 1st to 21 Century

**ஜூலை மாத இதழில்**
**ஆரம்பம் ஆனது**
**பக்கம் 16ல்**

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு
(1முதல் 21ம் நூற்றாண்டு வரை)

**புதிய கட்டுரைத் தொடர்**
**ஜூலை இதழில் ஆரம்பமானது.**
(பக்கம் 16 பார்க்கவும்)

**கட்டுரை ஆசிரியர்**
**அறிவர். திருமதி. சலோமி மனோகர்**
ஓய்வுபெற்ற உதவிப் பேராசிரியை, தூய. போப் கல்லூரி சாயர்புரம், தூத்துக்குடி மாவட்டம்.

படித்துப் பயனடைவீர்!! ஆசீர்வாதம் பெறுவீர்!!

வேதபகுதி
சங்கீதம்
50-100வரை

# வேதாகம போட்டி-143

ஓரிரு வார்த்தைகளில் பதிலளிக்கவேண்டும்

**பதில்களுடன் வேதவசன இருப்பிடம் எழுதவேண்டும்**

பதிலளிக்க
கடைசி நாள்
செப்டம்பர்-25

1. தேவன் தமது தாசனாகிய தாவீதை தெரிந்துகொண்டு, எங்கிருந்து அவனை எடுத்தார்?
2. ஒன்றையொன்று சந்திப்பவை எவை? ஒன்றையோன்று முத்தம் செய்பவை எவை?
3. செம்மையான இருதயத்தாருக்காக விதைக்கப்பட்டிருக்கிறது என்ன?
4. பூமியிலே மலைகளின் உச்சிகளில் விதைக்கப்பட்டிருக்கும் - அது என்ன?
5. எங்கு நாட்டப்பட்டவர்கள் தேவனுடைய பிரகாரங்களில் செழித்திருப்பார்கள்?
6. தராசிலே வைக்கப்பட்டால், மாயையிலும் லேசானவர்கள் - இவர்கள் யார்?
7. யாருடைய இரதங்கள் பதினாயிரங்களும், ஆயிரமாயிரங்களுமாய் இருக்கிறது?
8. காலையில் முளைத்து பூத்து, மாலையில் அறுப்புண்டு உலர்ந்துபோகும் - அது என்ன?
9. தேவன் சீயோனை இரட்சித்து, யாருடைய பட்டணங்களைக் கட்டுவார்?
10. தேவன் எதின் (எந்த) எல்லைவரைக்கும் யாக்கோபிலே அரசாளுகிறவர்?
11. கர்த்தருடைய பிரசன்னத்தினால் மெழுகுபோல் உருகியது(வை) என்ன(எவை)?
12. துன்மார்க்கர், என்றும் சுகஜீவிகளாயிருந்து எதைப் பெருகப்பண்ணுகிறார்கள்?
13. தேவன் இல்லை - என்று தன் இருதயத்தில் சொல்லிக்கொள்கிறது யார்?
14. ஜனத்துக்கு சமாதானம் தருவது எவை? நீதியின் விளைவோடிருப்பது எவை?
15. கர்த்தர் எதை அடித்ததால் தண்ணீர் புறப்பட்டு நதிகளாய் புரண்டு வந்தது?
16. யார், தங்கள் ஆயுசு நாட்களில் பாதிவரையில்கூட பிழைத்திருக்கமாட்டார்கள்?
17. யாருடைய யோசனைகள் வீண் என்பதை கர்த்தர் அறிந்திருக்கிறார்?
18. யாக்கோபின் வாசஸ்தலங்கள் எல்லாவற்றையும்விட கர்த்தர் பிரியமாயிருப்பது எதில்?
19. தாயின் வயிற்றில் பிறந்ததுமுதல் பொய்சொல்லி வழிதப்பி திரிபவர்கள் யார்?
20. சுத்த இருதயமுள்ள இஸ்ரவேலருக்கு தேவன் எப்படிப்பட்டவராய் இருக்கிறார்?

**வேதாகம போட்டிக்கான பதில்களை அனுப்பவேண்டிய முகவரி**

திருமதி. ஜெயசீலி தர்மராஜா, எஃப்–1, முதல் மாடி, பாரதி பிளாட்ஸ், எண்: 4/2-A, பாரதி தெரு, காந்தி நகர், சாலிகிராமம், சென்னை–93. வாட்ஸ்–அப்: 9789914463

**ADDRESS FOR SENDING ANSWERS OF BIBLE CONTEST**

Mrs. Jeyaseeli Dharmaraja, Flat: F-1, First floor, Bharathi flats, No: 4/2-A, Bharathi Street, Gandhinagar, Saligramam, Chennai-93.
E-mail: ratchippu@hotmail.com/sjddharmaraja@gmail.com. Whatsapp: 9789914463



சகோ. C. ஏஞ்சல்

# கர்த்தருடைய நாமங்களின் மகத்துவங்கள்

MY GOD ELOHIM SHELI

## என் தேவன்

EPISODE - 40 ஏலோஹீம் ஷெலி பாகம் - 40

நீரே என் தேவன்; உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக. சங்கீதம்–143:10பி

For thou art my God: thy spirit is good; lead me into the land of uprightness. Psalm-143:10b

சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிற நம் தேவனுடைய நாமத்தில் இரட்சிப்பின் விசுவாசிகளுக்கு செப்டம்பர் மாத கிருபை வாழ்த்துக்கள்.

சங்-104:1 என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி, என் தேவனாகிய கர்த்தாவே, நீர் மிகவும் பெரியவராயிருக்கிறீர், மகிமையையும் மகத்துவத்தையும் அணிந்து கொண்டிருக்கிறீர்.

ஏசாயா-61:10 கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன், என் தேவனுக்குள் என் ஆத்துமா களிகூர்ந் திருக்கிறது.

சங்-143:10 நீரே என் தேவன் உம்முடைய நல்ல ஆவி என்னைச் செம்மையான வழியிலே நடத்துவாராக. கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! கர்த்தருக்கு மகிழ்ச்சியைத் தருகிற ஜெபத்தை நாம் ஏறெடுக்கும்போது, நம் மேய்ப்பர்கள் வழியாக அவர் நம்மை ஆசீர்வதிக்கிறதைப் பார்க்கிறோம்.

பிலி-4:14-18 பவுலடியாரை, தேவபிள்ளைகள் ஜெபத்திலும் பொருளுதவியிலும் தாங்கியபோது, அவர் தமது மனதின் ஆழத்திலிருந்து பிலி-4:19ன்படி அவர்களை ஆசீர்வதிக்கிறார். எனவே, நாமும் தேவன் நமக்குத் தந்த உரிமையுடன் (நெகே-2:18), என் தேவனுடைய கரம் என்மேல் நன்மையாய் இருக்கிறது (எஸ்றா-7:28) என்று சொல்லி திடன்கொண்டு எழுந்து, தேவனுக்காக எதையாவது செய்கிறோம் என உறுதியேற்று விசுவாச அறிக்கை செய்வோம்.

ஜெபம்: ராஜாவாகிய என் தேவனே! உம்மை உயர்த்தி, உமது நாமத்தை எப்பொழுதும், என்றென்றைக்கும் ஸ்தோத்தரிப்பேன். உம்மை உத்தமமாய் பின்பற்றுவோம். நீர் எங்களை ஆளுகை செய்வீராக. உன் கால் மிதித்த தேசம் உனக்கும் உன் பிள்ளைகளுக்கும் என்றைக்கும் சுதந்தரமாய் இருக்கக்கடவது என மோசே வழியாய் ஆணையிட்டுக் கொடுத்த வாக்குத்தத்தத்தை எங்களில் நிறைவேற்றுவீராக. யோசுவாவிற்கு, ஊழியம் செய்வதற்காக நீர் கொடுத்த சரீர பெலன், உங்களில் இருப்பதாக என்று ஆசாரியர் ஜெபிக்கிற ஜெபம், எங்கள் சிரசின்மேல் அமர்வதாக. என் தேவனே, இந்திய தேசத்தில், இலங்கை தேசத்தில் உமது ராஜ்யம் வருவதாக. இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம் பிதாவே. ஆமென்.

கிறிஸ்துவுக்குள் உங்கள் அன்பு சகோதரி
**C. Angel**

தொகுப்பு: சகோதரி. C. ஏஞ்சல் B.Sc, திருநெல்வேலி, தென்னிந்தியா

தேன்துளி வேதவசனக் கதை–136*. . .

# நிந்தை சுமப்போம் மேன்மை அடைவோம்

சகோ. M. அசரியா ஞானதாஸ் M.A. M.Ed.



சகோ. அசரியா

மிருகங்களை வளர்ப்பதில் ஆர்வம் கொண்ட எடிசன் என்ற மனிதர் தன் வீட்டில் ஒரு அழகிய மான்-குட்டி ஒன்றை வளர்த்து வந்தார். அந்த மான்-குட்டி எடிசனின் விஸ்தாரமான வீட்டுத் தோட்டத்தில் ஆனந்தமாக துள்ளிக்குதித்து விளையாடி வீட்டிலுள்ள அனைவரையும் மகிழ்ச் சிக்குள்ளாக்குவது வழக்கம். எடிசனின் குடும்பத்தார் அனைவரும் அந்த மான்குட்டியுடன் கொஞ்சி விளையாடி தங்கள் நேரத்தை மகிழ்ச்சியுடன் கழித்துவந்தனர். இந்த வழக்கத்தின் படியே ஒருநாள், அந்த மான்குட்டி துள்ளி குதித்து விளையாடிக்கொண்டிருந்தது. அந்தோ பரிதாபம்! துள்ளி குதித்த மான்குட்டி தவறி, தோட்டத்திலிருந்த தடுப்புச் சுவரில்லாத ஒரு பாழும் கிணற்றில் விழுந்துவிட்டது. கிணற்றுக்குள் விழுந்த மான்குட்டி வெளியே வர வகை யறியாது கதறி தவித்தது. மான்குட்டியை காணவில்லையே! என கவலையுடன் தேடிய எடிசன், கடைசியாக அது தோட்டத்திலுள்ள பாழும் கிணற்றில் விழுந்து கிடப்பதை கண்டு பிடித்து விட்டார். ஆனால், கிணறு ஆழமாக இருந்ததால் அவரால் மான் குட்டியை மேலே தூக்க முடியவில்லை. இருந்தபோதிலும் அவர் மனம் தளரவில்லை, எப்படியாவது மான் குட்டியை உயிரோடு மீட்டிடவேண்டும் என்ற முயற்சியில் புதியதொரு முறையை கையாண் டார். அதன்படி அவர் அருகிலிருந்த ஒரு மண் மேட்டிலிருந்து மண் எடுத்து கொஞ்சம் கொஞ்சமாக அந்த கிணற்றுக்குள் கொட்டினார். அவர் ஒவ்வொரு முறை மண்ணை கொட டும்போதும் அது மான்குட்டியின்மேல் விழுந்தது. நடந்தது என்ன தெரியுமா? எடிசன் ஒவ்வொரு முறை மண்ணை கொட்டும்போதும் மான்குட்டி தன்மேல் விழுந்த மண்ணை உதறி விட்டு கொட்டப்பட்ட மண்-மேல் ஏறி நின்றுகொண்டதால், இறுதியில் கிணறு மண்ணால் நிரப்பப்பட்டபோது மான்குட்டி ஒரு சேதமும் இல்லாமல் கிணற்றுக்கு வெளியே வந்தது. வெளியே வந்த மான்குட்டியை எடிசன் கட்டி அணைத்துக்கொண்டபோதுதான் மான்குட்டிக்கு எஜமான் தன்மீது வைத்திருந்த அன்பை அறிந்து கொள்ள முடிந்தது. பின்னர் எடிசன் மான்குட்டியை குளிப்பாட்டி அதற்கு சத்துணவு அளித்தபின் அது வழக்கம்போல் வீட்டிலுள்ள அனைவரிடமும் விளையாடி அவர்களை மகிழ்வித்தது.

பிரியமானவர்களே! மான்குட்டி காப்பாற்றப்படுமுன் அதன்மேல் மண் வீசப்பட்டு அது பாடுகளுக்கு உள்ளானதைப்போல் நாமும் பரலோக பாக்கியத்தை பெறுமுன் நிந்தைகளுக் கும், துன்பங்களுக்கும் நம்மை ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதை நாம் ஒருபோதும் மறந்து விடக்கூடாது. ‘‘உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு ஆனாலும் திடன்கொள்ளுங் கள், நான் உலகத்தை ஜெயித்தேன்.’’ என்ற இயேசுவுக்காக நிந்தையை சுமக்க ஆயத்தமா?

கிறிஸ்துவினிமித்தம் வரும் நிந்தை அதிக பாக்கியம். எபி–11:26

அவருடைய நிந்தையை சுமந்து அவரிடத்திற்கு போகக்கடவோம். எபி–13:13

நான் உம் நிமித்தம் நிந்தையை சகிக்கிறேன். எரே–15:15

EPISODE 2

# இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு

1ம் நூற்றாண்டு முதல் 21ம் நூற்றாண்டு வரை

## இரண்டாயிரம் ஆண்டு வரலாறு.. இரண்டாம் வருகைக்கு தயாராகு...

கட்டுரை ஆசிரியர்
அறிவர். திருமதி. சலோமி மனோகர்



**இந்திய திருச்சபை சரிதை:
(1முதல் 21ம் நூற்றாண்டுவரை)
தொகுதி-1 பகுதி-2**

தொகுதி-1: இந்தியாவில் கிறிஸ்தவத்தின் தொடக்கம்:-

பகுதி-2: தாமஸ் பாரம்பரியமும் வடஇந்தியாவும்:-

கி.பி.52ல் ஒரு தச்சராக இருந்த செயின்ட் தாமஸ், கேரளா வில் உள்ள கொடுங்கல்லூருக்கு வந்து பஞ்சாபின் இந்தோ-பார்த்தியன் அரசர் கோண்டோபேரஸுக்கு ஒரு அரண்மனையைக் கட்ட முன்வந்ததாக சென்ற மாத இதழில் அறிந்தோம். கி.பி. 2ம் நூற்றாண்டிலும் இந்தியாவில் கிறிஸ்தவ மதம் போதிக்கப்பட்டு வேரூன்றி இருந்தது என்பதை அலெக்சாந்திரியாவில் இருந்து இந்தியாவிற்கு வந்த தத்துவ அறிஞர் பண்டேனூஸ் என்பவருடைய குறிப்புகள் மூலம் அறிய முடிகிறது. இவருடைய வருகையின் போது இயேசுவின் சீடர்களில் ஒருவரான பர்த்தலமேயு என்பவரும் இந்தியாவில் வந்திருப்பதற்கான குறிப்புகள் உள்ளதாக தெரிய வருகிறது. 'தோமாவின் பணிகள்' என்ற நூல் கி.பி.2 ஆம் நூற்றாண்டில் சிரியாக் மொழியில் எழுதப்பட்டது. அது இயேசுவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்பு, தோமா இந்தியாவுக்கு வந்து நற்செய்தி அறிவித்து உயிர்துறந்தது குறித்த வரலாற்று குறிப்புகளுடன் கூடிய கதையை வழங்குகிறது. இந்த நூல் இந்தியாவில் தோமா என்று பொதுவாக குறிப்பிட்டாலும், இந்தியாவில் இரண்டு பகுதிகளில் அவர் பணி செய்த விவரங்களைத் தருகிறது.

வேதங்களும் புராணங்களும் எழுத ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்தில் தான் அப்போஸ்தலர் தோமா இந்தியாவிற்கு வந்துள்ளார். கிறிஸ்தவ இலக்கியங்கள் வெளிநாட்டில் இருந்தபோதிலும், ரிக்வேதம், மகாபாரதம் மற்றும் தேவி பாகவதம் ஆகியவற்றில் குறிப்பிடப்பட்ட கங்கையில் நீராடுவதைப் போன்ற சடங்குகள் கிறிஸ்தவர்களின் ஞானஸ்நானத்தை ஒத்திருப்பதால், இந்தியாவில பல இந்துக்கள் ஞானஸ்நானத்தைக் குறித்ததான சித்தாந்தங்களை ஏற்றுக்கொண்டனர். கிறிஸ்தவத்தை பொருத்தவரையில் யூத கோட்பாடுகளின் தொடர்ச்சியே கிறிஸ்தவ கோட்பாடுகள். ஆனால் வேதகாலத்தைய (ரிக், யஜுர், சாம மற்றும் அதர்வ) கடவுளர்கள் இப்போது

இல்லை. இப்பொழுதுள்ள இந்து கோட்பாடுகளுக்கும் வேதகாலத்தின் கோட்பாடுகளுக்கும் பல்வேறு வேறுபாடுகள் உருவாகி உள்ளன.

கொண்டபோரஸ் அரசவைக்கு கி.பி 40-களில் அப்போஸ்தலர் தோமா வந்திருக்கிறார். அவருக்கு மாளிகை கட்டுவதாகக் கூறி பணத்தை வாங்கிக் கொண்டு, அதை ஏழை களுக்கு உதவி செய்ய செலவிட்டிருக்கிறார். குறிப்பிட்ட காலத்திற்கு பின் மாளிகையைப் பார்க்கச் சென்ற அரசர், அங்கு ஒரு சிறிய கல் கூட இல்லாததைக் கண்டு அதிர்ச்சி அடைந்து தோமா தம்மை ஏமாற்றி விட்டதாகக் கூறி, அவரைச் சிறையில் அடைத்த தாகவும், பின்னர் அரசரின் தம்பியான காத், திடீரென நோய்வாய்ப்பட்டு இறந்து போனார் அப்போது அவருக்கு இறுதிச் சடங்குகள் நடத்த ஏற்பாடு செய்து கொண்டிருந்த வேளையில், அவர் திடீரென எழுந்து விண்ணகத்தில் தமது அண்ணன் பெயரில் உள்ள மாளிகையைத் தமக்கு தருமாறு அனைவர் முன்பாக கேட்டாராம். இதையடுத்து, தோமா மாளிகை கட்டுவதாக கூறியது உண்மை என்று நம்பிய அரசர் கொண்டபோரஸ் தமது குடும்பத்துடன் ஞானஸ்நானம் பெற்று கிறிஸ்தவரானார் என்பது வட இந்திய பாரம்பரிய செய்தியாகும்.

அந்த காலகட்டத்தில் பல அரசர்கள் ‘கொண்டபோரஸ்’ என்ற பெயருடன் இருந்துள்ளனர். அதாவது கி.பி-20ல் இருந்து கி.பி-55 வரையிலேயே குறிப்பிட்ட இந்த ராஜ்ஜியம் இருந்துள் ளது. இது இந்தோ-பார்த்தியன் ராஜ்ஜியம் ஆகும். இதன் அரசனாகத்தான் ‘கொண்டபோரஸ்’ இருந்துள்ளார். இவரின் தலைநகரமாக ‘தச்சசீலா’ இருந்துள்ளது. இந்த நகரம் இப்பொழுது பாக்கிஸ்தானில் உள்ளது.

தோமா சிறிது காலம் மக்களுக்கு இயேசுவைப் பற்றிய நற்செய்தி பணி செய்து, பலர் மனந்திரும்பும் வகையில் பணியாற்றிய பின், அங்கிருந்து செக்கோட்டிரா தீவு வழியாக மீண்டும் பாலஸ்தீன் சென்றதாக வரலாறு கூறுகிறது. பின்னர், மீண்டும் இந்தியாவில் நற் செய்தி பணியாற்ற விரும்பிய தோமா, பண்டை தமிழகத்தின் சேர நாட்டு துறைமுகங் களில் ஒன்றான முசிறியில் கி.பி.52 ஆம் ஆண்டு வந்து இறங்கினாராம். இதை நாம் தாமஸ் பாரம்பரியமும் தென் இந்தியாவும் என்ற தலைப்பில் தெரிந்து கொண்டோம்.

நற்செய்தி போதனைகளை ஏற்றுக்கொண்டு மனந்திரும்பிய மக்களுக்கு, தோமா திருமுழுக்கு கொடுத்ததாகவும், மக்களிடையே பல அற்புதங்களை அவர் செய்ததாகவும், ஒருமுறை வானத்தை நோக்கி நீரை தெளித்தவாறு மந்திரம் சொல்லிக் கொண்டிருந்த பிராமணர்கள் சிலரைக் கண்ட தோமா, நீர்த்துளிகளை அந்தரத்திலேயே நிறுத்தி அற்புதம் செய்ததாகவும், அதைக் கண்ட அனைவரும் மனந்திரும்பி கிறிஸ்தவர்களாக மாறியதாகவும். மட்டுமல்ல தோமாவின் வாழ்க்கை மற்றும் போதனைகளால் பலர் சத்தியத்தை அறிந்து இயேசுவை ஏற்றுக்கொண்டனர் என்று வரலாறு கூறுகிறது.

இந்தியாவில் சுமார் 4-மில்லியன் கிறிஸ்தவர்கள் இருந்தனர். இதில், கேரள தாமஸ் கிறிஸ்தவர்களும், உலகளாவிய புலம்பெயர்ந்த கிறிஸ்தவர்களும் அடக்கம். தாமஸ் பாரம்பரியம் தென்னிந்திய கிறிஸ்தவத்தின் அடித்தளமாக திகழ்வதுபோல் வடஇந்தியாவில் முக்கியத்துவம் பெறவில்லை என்பதே உண்மை.

இந்திய கிறிஸ்தவ திருச்சபை வரலாறு தொடரும்...

Author: Dr. Mrs. Salomi Manohar, Asst. Professor Rtd.,
(Pope’s College Sawerpuram), Thiruvanmiyur, Chennai. South India

# ஜெப-ஜன்னல் நன்றி-பலிகள்

**கர்த்தரை நோக்கி மன்றாடி ஜெபிப்போம் - Come! Let us intercede to God**

1) அகில உலக மக்களின் சுக வாழ்வுக்காக... உக்ரைன்-ரஷ்யா போர் முடிவுக்கு வர... இலங்கை, பாக்கிஸ்தான், ஆப்கானிஸ்தான் நாடுகளில் பொருளாதார சீர்கேடு முடிவுக்கு வர... பெருந்தொற்று, புயல்-மழை, காட்டுத் தீ போன்ற இயற்கை பேரிடர்களிலிருந்தும், பிரிவினை வாதம் மற்றும் பயங்கரவாதங்களி லிருந்தும் மக்கள் பாதுகாக்கப்பட...

2) இந்திய மக்களின் நல்வாழ்வுக்காக... இந்திய பொருளாதாரம் சீரடைய... ஒன்றிய அரசு அனைத்து மாநிலங்களையும் சமமாக பாவித்து நடத்த... விலை வாசிகள் கட்டுப்படுத்தப்பட... மாநிலங்களுக்கு சேரவேண்டிய நிலுவைத் தொகை மற்றும் நிதியை ஒன்றிய அரசு பாரபட்சமின்றி வழங்க... இந்திய நீதிமன்றங்கள் மற்றும் நீதியரசர்கள் மக்களக்கான நீதியை பாரபட்சமின்றி வழங்க...

3) தமிழ்நாட்டு மக்களின் நல்வாழ்வுக்காக... தமிழக மக்கள் அனைவரும் இன - மத - மொழி வேறுபாடின்றி வாழ... தமிழ்நாட்டில் விவசாயம் மற்றும் தொழில்கள், வியாபாரம் சிறக்க... தமிழ்நாட்டு மீனவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட... புயல் மழை - வெள்ளம் - கொரோனா பாதிப்புகளிலிருந்து மக்கள் மீண்டுவர...

4) திருமதி. மெர்லின், திருமதி. பாக்கியா, திருமதி. திலகவதி மகேஷ், திருமதி. வைலட், திருமதி. சுதா, திருமதி. பிரியா சுதிர், திருமதி. புஷ்பாவதி, திருமதி. ஹனா விஜய் ஆகியோருக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க...

5) உயர் கல்வி பயின்று வரும் நம் பிள்ளைகள் கி஁ப்சன் தங்கராஜ், பிரின்ஸ் ஜேக்கப், ஜாஷ்வா மேத்யு, ஷெர்லி ஜுடியா, டிரிசியா லவ்ஸ்லி, ஜாய்ஸ் கிறிஸ் டினா, ஜோ஁ப்னா, ஜெனிபர், கி஁ப்ட்லின், சிந்தியா பிரகாஷ், ஆகியோருக்கு சிறந்த ஞானம் வழங்கப்பட...

6) திருமதி. எஸ்தர், திருமதி. ஃபிளாரன்ஸ் ராஜமணி, திரு. பி.ஹெச். ஜெயச்சந் திரன், திருமதி. ஈவ்லின் சிப்பொர், திருமதி. எபனேசர், திரு. சாம் எலியேசர், திருமதி. லீலா மனோகர சிங், திரு. பிலிப், திருமதி. ஞானரத்தின பாய், திருமதி. தங்கம் ஜோன்ஸ், திருமதி. மேரி கிரேஸ் ஆகியோரின் சரீர சுகத்திற்காக...

7) திருமதி. சுந்தரிபாய், திருமதி. குளோரி ஜெயபால், திருமதி. மேரி தேவதாஸ், திருமதி. ஐரீன் வாக்கர், திருமதி. வசந்தா அன்பன், திருமதி. வனஜா ஹெர்பர்ட், திருமதி. மங்களராணி ஞானப்பிரகாசம், திருமதி. ஹேம லதா ராஜமணி, திருமதி. சார்லெட் டேவிட், திருமதி. ரத்னாபாய் சாம், திருமதி. அலீஸ் ரெஜினாபாய், திரு. அப்பன் டேவிட் ஆகியோரின் குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

8) நமது ஊழிய ஆதரவாளர்களான திருமதி. கிரேஸ் பொன்மணி ரெக்ஸ், திருமதி. அரோமா சாத்ராக், திரு. சாம்சன் ஆபிரகாம், திருமதி. நிறைமதி ஜாண் ஸன், திரு.எஸ்.ஜே.பி. ராஜா, திரு. நிக்ஸன் எவர்பிரைட், திரு. பி.ஹெச். ஜெயச்சந் திரன், திரு. அசரியா ஞானதாஸ் ஆகியோருக்காக... அவர்களுடைய குடும்ப ஆசீர்வாதங்களுக்காக...

# வேதாகம போட்டி-142 (சங்கீதம் 1 - 50)

## சரியான விடைகள்

1. கர்த்தருடைய சொற்கள் சங்:-12:6
2. பூமி சங்:-24:1,2
3. துன்மார்க்கர் சங்:-1:4
4. கீழ் காற்றினால் சங்:-48:7
5. அவ. பயந்தவர்களிடம் சங்:-25:14
6. ராஜாக்கள், அதிகாரிகள் சங்:-2:2,3
7. அழி.மிருகங்களுக்கு சங்:-49:20
8. ஜாதிகள் சங்:-9:15
9. உத்தமர்கள் சங்:-37:18,19
10. தமது கிருபையை சங்:-42:8
11. பாவிகளுக்கு சங்:-25:8
12. சீயோன் பர்வதம் சங்:-48:2
13. பூமியை சங்:-50:1
14. நீதிமானை சங்:-5:12
15. பாவி சங்:-7:11,12
16. பூமி சங்:-33:5
17. துன்மார்க்கன் சங்:-10:2
18. கர்த்தருடைய சத்தம் சங்:-29:9
19. நதியின் நீர்க்கால்கள் சங்:-46:4
20. நீதிமான்கள் மேல் சங்:-34:15

## CONTACT DETAILS AND BANK DETAILS OF OUR MINISTRIES

**CONTACT DETAILS OF OUR MINISTRIES:**

**CALL**: 9962924900/9789914464.

**WHATSAPP:** 9789914463/7871676100

**E-MAIL**: ratchippu@hotmail.com/ sjddharmaraja@gmail.com

**POSTALADDRESS:** REV. S.J.D. DHARMARAJA, MISSION DIRECTOR, NO: 4/2-A, BARATHI ST., GANDHI NAGAR, SALIGRAMAM, CHENNAI - 93.

**WEBSITE ADDRESS:** www.ratchippu.in/ratchippu.in

**BANK DETAILS FOR SENDING OFFERTORY**

**NAME:** DHARMARAJA SJD.

**S.B.ACCOUNT NO**: 601071548.

**BANK:** INDIAN BANK,

**BRANCH:** NESAPAKKAM BRANCH

**IFSC CODE:** IDIB000N122.

**BANK ADDRESS:** K.K.NAGAR, CHENNAI-78.

**GOOGLE PAY (G-PAY) NAME AND NO.:** REV. DHARMARAJA SJD: 9789914463

## ஆசிரியர் தின நல்வாழ்த்துக்கள்

**இரட்சிப்பு** பத்திரிக்கையின் அன்பான வாசகர்கள், ஆதரவாளர்கள், படைப் பாளர்கள், அலுவலக-வலைதள பணியாளர்கள், நல்ல-விதைகள் கைபிரதி களப்பணியாளர்கள், அனைத்துத் திருச்சபை விசுவாசக் குடும்பத்தார் ஆகிய உங்களில் ஆசிரியப்பணியில் உள்ள அனைவருக்கும் எங்களது உள்ளம் கனிந்த ஆசிரியர் தின நல்வாழ்த்துக்கள்.

கர்த்தர்தாமே உங்களை
ஆசீர்வதிப்பாராக.
ஆமென்.

**இரட்சிப்பு**
ஊழிய-குடும்பத்தார்




5th September 2022

Ratchippu Tamil Monthly. Registered News Paper.
Date of Publication: First week of every month
RNI Regn. No.: TNTAM/2012/48197. Postal Regn. (RNP) No.: TN/CC (S) DN/468/22-24.
Licensed to post without prepayment under WPP No.: TN/PMG(CCR)WPP-583/22-24.
Due date for Posting: 8th, 9th & 10th of every month. Posted on: 9th September 2022.
Posted at: RMS Patrika Channel Window, Egmore, Chennai-600 008.

# செய்தித்துளிகள்

1. பொருளாதார வீழ்ச்சியால் சீர்குலைந்துள்ள இலங்கையில் சீரமைப்பு நடவடிக்கையாக சாக்லேட், ஷாம்பூ, ஒப்பனை பொருட்கள் உள்ளிட்ட 300வகை நுகர்பொருட்களை இறக்குமதி செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது.

2. சி.பி.ஐ-வசம் உள்ள 6700-ஊழல் வழக்குகளில் 275-வழக்குகள் 20-ஆண்டுகளும், 1939-வழக்குகள் 15-ஆண்டுகளும், 2273-வழக்குகள் 7-ஆண்டுகளும் முடிக்கப்படாமல் உள்ளதாக ஒன்றிய கண்காணிப்பு ஆணையம் தகவல்.

3. ஒன்றிய அரசின் இலவச-பூஸ்டர்-கொரோனா தடுப்பூசி திட்டம் செப்-30ல் முடிவடைவதால், செப்டம்பர் முழுவதும் இலவச தடுப்பூசி முகாம் நடைபெறும் என தமிழக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்.

4. பிரவியா எக்ஸ்.ஆர்.எக்ஸ்-95கே என்ற புதிய 85” எல்.இ.டி டி.வி.யை அறிமுகம் செய்துள்ளது சோனி நிறுவனம். இது காக்னிடிவ் பிராசஸர், 16-ஜி.பி மெமரி, ஆண்ட்ராய்டு-கூகுள் இயங்குதளம் மற்றும் புளூடூத்-4.2 வசதி கொண்டது.

5. வரும் 2023 ஜனவரியில் 16-நாடுகள் பங்கேற்கும் உலகக் கோப்பை ஹாக்கி தொடர் இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் நடைபெறுகிறது. இரு விளையாட்டு அரங்குகளில் இந்தப் போட்டிகளை நடத்த ஒடிசா மாநில அரசு தயாராகிறது.

Posted on: 9th September 2022

To

If undelivered Please return to:

**REV.S.J.D. DHARMARAJA**
MISSION DIRECTOR
RATCHIPPU TAMIL MONTHLY,
NO: 4/2–A, BHARATHI STREET,
GANDHI NAGAR, SALIGRAMAM,
CHENNAI -93, TAMILNADU, SOUTH INDIA.

Owned & Published by: S.J.D. Dharmaraja. Published from No:6-A, Ambedkar St., Gandhinagar, Saligramam, Chennai-93. Printed by: S.Isaac Prince at Sams Graphics, No: 1, 12th Avenue, Ashok Nagar, Chennai - 600 083. Editor: M. Azariah Gnanadoss.